**வேளாண்மை அறிவியல் நிலையம்**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

சிக்கல் - 611 108, நாகப்பட்டினம்

*அன்புடையீர் வணக்கம்!*

கீழ்கண்ட செய்திக்குறிப்பினை தங்களின் மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

********

## சுதந்திர திருநாள் அமுத பெருவிழா மற்றும் சர்வதேச யோகா தினம் சமச்சீர் உரங்களின் பயன்பாடு மற்றும் வேளாண் காடுகள் தொழில்நுட்ப கருத்தரங்கு

நாகை மாவட்டம் , சிக்கல் , வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 21.06.2022 அன்று சுதந்திர திருநாள் அமுத பெருவிழா மற்றும் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சமச்சீர் உரங்களின் பயன்பாடு மற்றும் வேளாண் காடுகள் குறித்து விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை சிக்கல் ஊராட்சிமன்ற தலைவர் திருமதி விமலாராஜா அவர்கள் தொடக்கிவைத்து கருத்துரை வழங்கினார். இக்கருத்தரங்கில் பங்குபெற்ற விவசாயிகள் மற்றும் நிலையத்தின் அலுவலர்களுக்கு யோகா செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சமச்சீர் உரங்களின் பயன்பாடு மற்றும் நானோ உரங்கள் பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து உழவியல்துறை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் வே.கண்ணன், அவர்கள் விளக்கமளித்தார். இப்கோ நிறுவன மண்டல மேலாளர் திரு. பொம்மணன் அவர்கள் நானோ உரங்கள் மற்றும் நானோ யூரியா தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தார். மேலும் பூச்சியியல் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் கோ.சந்திரசேகர் அவர்கள் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுபாடு, மண்புழு உரம் தயாரிப்பு குறித்து விளக்கமளித்தார். மண் பரிசோதனை மற்றும் மண் மாதிரி சேகரிப்பு முறைகள் குறித்து தொழில்நுட்ப அலுவலர் திரு.வீ.ஞானபாரதி அவர்கள் செயல்முறை விளக்கமளித்தார். முன்னதாக, சிக்கல் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி விமலாராஜா அவர்கள் தலைமையில் வேளாண்மை அறிவியல் நிலைய வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது. இக்கருத்தரங்கில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மீன்வள விரிவாக்க தொழில் நுட்ப வல்லுனர் திரு. யு.ஹினோ பர்னான்டோ, கால்நடை பராமரிப்பு துறை தொழில்நுட்ப வல்லுனர் சு.முத்துகுமார், மீன்பதன தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஆ.மதிவாணன், தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் திரு.க.ரகு, பண்ணை மேலாளர் திரு.ரே.வேதரெத்தினம், கணினி உதவியாளர் திருமதி கோ.ரம்யா மற்றும் கீழையூர், வேதாரண்யம் வட்டாரத்தைச் சார்ந்த அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தனர். இவ்விழாவில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

நாள்: 21.10.2022

**ஒப்பம்XXXXX**

திட்ட ஒருங்கிணைப்பாளர்